# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தெங்கு அபிவிருத்தி (திருத்தம்)

**1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களால்*
*2019, மாச்சு மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **275 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், சபைக்கு தொழிற்பாட்டு பணிப்பாளரொருவரை நியமிக்கும் பொருட்டு, (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.

**வாசகம் 3** : இவ்வாசகம், தொழிற்பாட்டு பணிப்பாளர் தொடர்பிலான கருமங்களை ஏற்பாடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ எனும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதாகும்.

**தெங்கு அபிவிருத்தி**
**(திருத்தம்)**

*ச.வ. - ஓ. 28/2017*

## *1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:- *1971ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(1) பந்தி (ix) இல் "நியமிக்கலாம்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமிக்கலாம்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ix) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ixஅ) பிரிவு 2அ இன் ஏற்பாடுகளுக்கு இணங்க தொழிற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை நியமிக்கலாம், அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக இருத்தலாகாது; அத்துடன்".

**3**. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

“சபையின் தொழிற்பாட்டு பணிப்பாளர்.

2அ. (1) அமைச்சர் தெங்கு அபிவிருத்தி என்னும் விடயப்பரப்பில் பரந்த அனுபவம் கொண்டிருக்கும் ஆட்களிடையே இருந்து தொழிற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சபைக்கு நியமிக்கலாம்.

(2) தொழிற்பாட்டு பணிப்பாளர்–

(அ) முழுநேர அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் சந்தைப்படுத்தலை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதில் தவிசாளருக்கு உதவுதல்; அத்துடன்

(இ) சபையின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பது உட்பட சபையின் அலுவல்களை நிருவகிப்பதில், முகாமை செய்வதில் மற்றும் தொழிற்படுத்துவதில்தவிசாளருக்கு உதவுதல்.

(3) அமைச்சர் பதவி அகற்றுவதற்கான காரணங்களை குறித்தளித்தபின்னர் தொழிற்பாட்டு பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தொழிற்பாட்டு பணிப்பாளரின் பதவிக் காலம் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதி ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அவர் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராக இருத்தல்

வேண்டும். அத்தகைய மீள் நியமனம் விளைவானதாக இருந்தாலுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி மேலும் ஒரு காலப்பகுதிக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(5) தொழிற்பாட்டு பணிப்பாளர் பதவியானது, இறப்பின் மேல், (3) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் பதவி விலகுவதன்மேல் வெற்றிடமாக வருதல் வேண்டும்.

(6) தொழிற்பாட்டு பணிப்பாளர் சுகவீனம் காரணமாகவோ, இயலாமை காரணமாகவோ அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகவோ தனது பதவிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகின்றவிடத்து அமைச்சர் அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கு சபையின் வேறொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) தொழிற்பாட்டு பணிப்பாளருக்கு நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட இயைபான பொதுத் தொழில்முயற்சி சுற்றுநிருபத்தில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.